Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 24 | 07-06-2003 | சனிக்கிழமை | ஓசை 109

அழகன்
மறுதோன்றிப் பதிப்பகம்
ஒரே பதிப்பகம்
யாழ் சாலை,
கிளிநொச்சி.

## தமிழர் தாயகப் பிரதேசமெங்கும்

# பெரும் எழுச்சியுடன் மாணவர் எழுச்சி நிகழ்வுகள்; பல இடங்களில் இராணுவம், பொலிசார் இடையூறு

## அச்சுறுத்தல்களையும் மீறிப் பங்கேற்பு

**தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் தமிழர்தாயகப் பிரதேசம் எங்கும் பெரும் உணர்வெழுச்சியுடன் நிகழ்ந்தேறியது. தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவமும்- பொலிசாரும் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளுக்குப் பெரும் இடையூறுகளை விளைவித்ததோடு மாணவர்களையும் அச்சுறுத்தினர். ஆயினும் மாணவர்கள் தடைகளையும் மீறி இந் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.**

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் நேற்று தமிழீழப் பிரதேசமெங்கும் எழுச்சிபூர்வமாக இடம்பெற்றன. காலையில் பல்லாயிரக் கணக்கான மாணவர்களும் கல்விச் சமூகமும் பொதுமக்களும் கலந்து கொண்ட எழுச்சி ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் இடம்பெற்றன. மாலை கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு அனைத்துப் பாடசாலைகளும் சிவப்பு-மஞ்சள் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அத்துடன், மாணவர் எழுச்சி நாளை எடுத்துக்கூறும் பதாகைகள் கட்டப்பட்டு, சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததுடன், துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி சிவகுமாரனுக்கு உரும்பிராயில் அஞ்சலி நிகழ்வு

(வடமராட்சி)

நேற்றுக் காலை உரும்பிராயில் உள்ள தியாகி சிவகுமாரன் ஞாபகார்த்த தூபிப் பகுதியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்பாகக் கூடிய பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஊர்வலமாக தியாகி சிவகுமாரன் தூபிப் பகுதிக்குச் சென்றனர்.

அங்கு தியாகி சிவகுமாரனின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செய்து சுடரினை அவரது தாயார் அன்னலட்சுமி பொன்னுத்துரை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (27)





கிளிநொச்சியில் நடைபெற்ற மாணவர் எழுச்சி நாள் பேரணியும், எழுச்சிக்கூட்டமும். (படங்கள்: லோகீசன்)

## தேசத்தை நேசிக்கின்ற பண்பு நிச்சயம் மாணவர்களிடையே ஏற்பட வேண்டும்

### மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் தமிழினி



(அலுவலக செய்தியாளர்)

நாம் போராடுகின்ற தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இனம், நமது தேசத்தைக் கட்டி எழுப்பப் போகின்றவர்கள் இந்த மாணவர்களே.

நல்ல ஆரோக்கியமான எதிர்கால சந்ததியாக வளரப் போகின்றவர்கள் இந்த மாணவர்கள். இம் மாணவர்களிடையே தேசத்தை நேசிக்கின்ற பண்பு நிச்சயம் ஏற்பட வேண்டும் என தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார். மாணவர் எழுச்சி நாள் நிகழ்வில் இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; நீங்கள் வகுப்பறைகளில் மேலதிகமாக உங்களின் பாடத்திட்டங்களுக்குள் உள்ளடங்காத பல விடயங்களைக் கற்க வேண்டும். எமது மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களின் இளமைக் காலம், கல்வி வாழ்க்கை என்பன மிகவும் நெருக்கடியான பற்றாக்குறையுடன் தான் - தமது வாழ்க்

(08ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாதது கவலைக்குரியது

### கொழும்பு வந்த அமெ.அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளாமை மிகவும் கவலைக்குரியது என அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி உதவிகள் முகவர் நிலையத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பிரிட்ரிக் டட்செக் தெரிவித்துள்ளார். ஜப்பானில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டினை விடுதலைப்புலிகள் புறக்கணிப்பது சர்வதேச சமூகத்திற்கு தவறான சமிக்ஞைகளைக் காட்டும் எனவும் அவர் கூறினார். டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டிற்குச் செல்லும் வழியில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிப் பகுதியில் வேவு விமானம் நோட்டம்

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தை அண்டிய பல பகுதிகளை சிறிலங்கா இராணுவத்திற்குச் சொந்தமான வேவு விமானம் ஒன்று நோட்டமிட்டுச் சென்றுள்ளது. காலை 8.30 இற்கு உள்நுழைந்த வேவு விமானம் மதியம் 12.25 வரை நோட்டமிட்டுச் சென்றுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. (12)

## மட்டு. திமிலைதீவில் இருபோராளிகள் துணைப்படையினரால் நேற்றுக் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திமிலை தீவுப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் இரண்டுபேர் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர். வழமையான அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உறுப்பினர்களை தேசிய துணைப்படையினர் கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது குறித்த ஆட்சேபனையை விடுதலைப்புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடுதலைப்புலிகள் இருவரும் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இதனையடுத்து இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் வழங்குவது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டில் அரசாங்கம் கலந்து கொள்வதை பொதுசன ஐக்கிய முன்னணி பாராட்டி உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே லக்ஸ்மன் கதிர்காமர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவி வழங்குவதாக இருந்தாலும் அதனையும் நாம் பாராட்டுகின்றோம். கிடைக்கும் உதவிகளைக் கொண்டு வடகிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போது இருக்கும் நிலையில் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தினை வழங்குவது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும். இது நாட்டின் தலைவிதியில் பல விளைவுகளை ஏற்படுத்தும்.

புலிகளிடம் இருவேறான இராணுவக் கட்டமைப்பு இருக்கின்றது. இது முழு உலகுக்குமே தெரிந்த விடயம். ஆகவே இறுதித்தீர்வு வருவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை புலிகளின் கையில்

(08ஆம் பக்கம் பார்க்க)

# 90ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 12 ◈ 09 ◈ 1978

விண்ணில் 10 ◈ 03 ◈ 2003



*கடற்புலி 2ஆவது ஒவிசர்*

## சுடர்மன்னன்

கருணானந்தம் சர்வானந்தம்
கள்ளப்பாடு முல்லைத்தீவு.

*விடுதலைக்கு வித்தான வீரமகனே*
*சகோதரனே மைத்துனனே அன்புமாமாவே*
*ஆறாது எம் துயர்*
*உன் குழந்தை முகம் தேடி அலைகின்றோமடா*
*உன் பாசக் குரல் கேட்கத் தவிக்குதடா எம் செவிகள்*
*நீ எப்போ வருவாய் எம்மிடம்*
*உன்னைக் காண கண்ணீர் சொரிய*
*உன் கல்லறை சென்று மலர்தூவி வணங்குகின்றோம்.*

08 – 06 – 2003 நாளை நடைபெறும் 90ஆம் நாள் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(3224) **குடும்பத்தினர்.**

# வாகனம் விற்பனைக்கு

E.L.F - 250
E.L.F - 150

உந்துருளி



PASSION
T.V.S VICTOR
HERO HONDA
M.D.90



**மேலுள்ள வாகனங்கள் டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையின் பயன்பாட்டில் உள்ளவை விற்பனை செய்வதற்கு கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான வேண்டுகைகள் உரிய கேள்விப் படிவங்களில் விலை விளக்கத்தை குறித்து 15.06.03 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வாகனங்களைப் பார்வை இடவும். மேலதிக விளக்கங்களைப் பெறவும். 07.06.03 - 09.06.03 வரை சனி, ஞாயிறு, திங்கள் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த (தனியார்) மருத்துவமனை கிளிநொச்சியில் காலை 8.30 மணி தொடக்கம் 5.00 மணிவரை பார்வை இடவும்.**

நிர்வாகம்,
**டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை,**
**கிளிநொச்சி.**

(சி-8147)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சதாசிவம். இராஜேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை கிளிநொச்சிக்கும் புளியங்குளத்திற்கும் இடையில் உந்துருளியில் பயணித்த போது தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் சேர்க்கவும். (3306)

### அறிவுடைமை கல்வி நிலையம், கிளிநொச்சி.

**B.A** பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி விரிவுரை ஆரம்பம்.

தூர இடத்து மாணவர் வசதி கருதி நேர அட்டவணை தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் - 07.06.2003 சனி. மாலை 2.00 மணிக்கு. நிர்வாகி. (3308)

### ஊர்திப்பதிவுப் பகுதியின் வேண்டுகோள்

2003 வதியட்டை தமிழீழ பதிவுப்புத்தகம் மின்றி ஊர்திகளை கைமாற்றம், கொள்வனவு செய்ய வேண்டாம் என்பதை தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவு பகுதியினர் அறியத்தருகின்றனர்.

### பொருண்மியச் செய்திகள் வெளிவந்தது

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொருண்மியச் செய்திகள் பன்னிரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

மேற்படி நிறுவனத்தினால் மாதம் ஒருமுறை வெளியிடப்பட்டு வரும் பொருண்மியச் செய்திகள் மே-யூன் மாதத்திற்கான இவ்விதழ் தமிழீழத்தில் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தி பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வட்டக்கச்சி விவசாய மாதிரிப் பண்ணையில் காற்றாலை மூலம் மின்சார உற்பத்தி இயற்கை பசளைகளின் பாவனைபற்றிய நேர்காணல் காடழிப்பினால் ஏற்படும் விளைவுகளும் அதனைப் பேணவேண்டிய அவசியமும் போன்ற அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. (பா)

## உலக சூழல் தினத்தை முன்னிட்டு

# வவு.அரசியல்துறைப் பொறுப்பாளரும் மக்களும் சிரமதானம்

உலக சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியா வைத்தியசாலையில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலக சூழல் தினமான நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் இணைந்து இச் சிரமதானப் பணியை மேற்கொண்டுள்ளனர். (பா)

# பாராட்டுகின்றோம்



உலக சுற்றாடல் தினம் 2003 தொடர்பாக மத்திய சுற்றால் அதிகார சபையினால் அகில இலங்கை மட்டத்திலான பாட சாலை மாணவர்களுக்கிடையிலான "நீரும் வாழ்க்கையில் ஊற்றாகும்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த வ/புதுக்குளம் மகாவித்தியாலய தரம் 12 மாணவன் வேலம் புராசன் ராஜீவ் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். இவருக்கான பரிசு கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் உலக சுற்றாடல் தினமான ஜூன் 05 ஆம் திகதி வழங்கப்பட்டது. இவர் ஓமந்தை அலை கல்லுப்போட்டகுளம் என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு பாடசாலை சார்பாக எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தா. அமிர்தலிங்கம்,**
அதிபர்,
வ/புதுக்குளம் ம.வி.,
சாஸ்திரி கூழாங்குளம்.

(சி-7896)

# கேள்வி அறிவித்தல்

இம் மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு 2003 யூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் உலர் உணவு விநியோகம் மேற்கொள்ள பின்வரும் அளவான நாட்டுப் புழுங்கல் அரிசி, கோதுமை மாவு வழங்கக் கூடிய பதிவு செய்யப்பட்ட உள்ளூர் நிறுனங்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மாதம் | நாட்டுப்புழுங்கல் அரிசி | கோதுமை மாவு |
|---|---|---|
| 2003 யூலை | 520 மெ.தொன் | 350 மெ.தொன் |
| 2003 ஆகஸ்ட் | 520 மெ.தொன் | 300 மெ.தொன் |
| 2003 செப்ரெம்பர் | 520 மெ.தொன் | 300 மெ.தொன் |

கேள்வி விண்ணப்பங்களை 2003.06.09 ஆம் திகதி முதல் 2003.06.17ஆம் திகதி வரை புனர்வாழ்வு செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான ஆவணங்களையும், மேலதிக விபரங்களையும் மேற்படி செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபரும், மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-8145)



## கிளிநொச்சித் தமிழ்ச்சங்கம் நடாத்தும்

# திருக்குறள் மாநாடு 2034 (2003)

**இடம்- கிளிநொச்சி உயர்நிலைப்பள்ளி [மகா வித்தியாலயம்.]**

**08-06-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி**

தலைமை: பேராசிரியர் அ.சண்முகதாசு

கருத்துரை வழங்குவோர்:
(01) முனைவர் மனோன்மணி சண்முகதாசு
(02) முனைவர் சி.சிவலிங்கராசா
(03) திரு.பொன் கணேசமூர்த்தி
(04) பேராசிரியர் நா.ஞானகுமரன்
(05) திரு.ந.விஜயசுந்தரம்
(06) திருமதி.பி.மதுரநாயகம்

09-06-2003 திங்கட்கிழமை.

தலைமை - திரு.அ.கனகரத்தினம்
2.30 மணி - கலைபண்பாட்டு ஊர்வலம்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிக் கோட்ட பாடசாலை மாணவர் சிறப்புச் சொற்பொழிவு

திரு.ந.கோபாலமூர்த்தி
முனைவர் அ.சண்முகதாசு
பரிசளிப்பு, கலை நிகழ்வுகள்

போராளிகள், அரச மேலாளர்கள், தமிழ் அறிஞர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

**அனைவரும் திரண்டு வருக. வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! கிளிநொச்சி தமிழ்ச்சங்கம்.**

(சி-7897)

# பாக். தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்திய பின்னரே பேச்சு

## - இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

**பாகிஸ்தானை அடிப்படையாகக் கொண்ட காஷ்மீரில் இயங்கும் முஸ்லிம் தீவிர வாதிகளின் நடவடிக்கைகளை பாகிஸ்தான் கட்டுப் படுத்திய பின்னரே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்று இந்தியப் பிரதமர் வாஜ் பாய் நிபந்தனை விதித்துள்ளார்.**



சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் பட்சத்தில் பாகிஸ் தானின் கட்டுபாட்டுப் பகுதியி லுள்ள அசாத் காஷ்மீர் பகுதியும் உள்ளடக்கப்பட வேண்டும்.

தற்போது நிலவி வரும் எல்லைப்புற பயங்கரவாத நட வடிக்கைகள் பேச்சுவார்த்தைக்கு முன்பு முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் மண்ணிலிருந்து தீவிரவாத அமைப்புகள் எவையும் செயற்படவில்லை என்றும் இந்தியா கூறும் பயங்கர வாத அமைப்புக்கள் காஷ்மீரில் இருந்துதான் செயற்படுவதாகவும், அவற்றை பாகிஸ்தான் கட்டுப்படுத்த இயலாது என்றும் பாகிஸ்தான் உள்துறை அமைச் சர் ஹான்சஸ் சஹோ அயஸ் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் தீவிரவாத அமைப்பு க்கள் பற்றிய ஆதாரங்களை வழங்குமாறு இந்தியாவை தாங் கள் ஏற்கனவே கேட்டுக் கொண் டதாகவும் அவர் கூறியுள்ளார்.

தீவிரவாதிகளை பாகிஸ்தான் ஊக்குவிப்பதாகக் கூறப்படுவதை அவர் மறுத்துள்ளார்

ஐ.நா. தலைமையிலான அமைதிப்படையை காஷ்மீரில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடு த்த இந்தியா ஒப்புக் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தி யுள்ளார்.

# அல்ஜீரியாவில் 11 வருடங்களில் வன்முறைக்கு ஒரு இலட்சம் மக்கள் பலி!

(லண்டன்)

அல்ஜீரியாவில் தடை செய்யப் பட்ட முஸ்லிம் தீவிரவாத இயக் கத்தினர் நேற்று முன்தினம் 08 பொலிசாரைக் கொன்றுள்ள னர்.

பொலிசாரைக் கொலை செய் வதற்கு முன்பு 12 பொது மக் களையும் இவர்கள் கொன்றுள்ள தாகக் குற்றம் சாட்டப்பட்டு ள்ளது.

இதே வேளை கடந்த 10 தின ங்களில் இந்த இயக்கத்தினால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 40 ஆகும் என அல்ஜீரிய பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் 06 வாகனங் கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 02 பேர் காயமடை ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

1992ஆம் ஆண்டிற்குப் பின்னர் அல்ஜீரியாவில் இடம் பெற்று வரும் வன்முறைகள் மூலம் ஒரு இலட்சத்திற்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நா ட்டு அறிக்கைகள் கூறுகின்றன.

# பயங்கரவாதிகளுக்கு ஈரான் சொர்க்கபுரி அமெரிக்கா மீண்டும் குற்றச்சாட்டு

## – ஈரான் மீண்டும் மறுப்பு

(வாஷிங்டன்)

பயங்கரவாதிகளுக்கும், தீவிர வாதிகளுக்கும் ஈரான் ஒரு சொர் க்கபுரியாக விளங்குகின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி யுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் எவ் வித உண்மையும் இல்லை என்று ஈரானின் முன்னாள் தலை வர் கொமினி மறுத்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா குற்றம் சாட்டுவது புதியதொரு விடய மல்லவென்றும் இஸ்லாமியப் புரட்சி இடம்பெற்ற நாள் முதல் அமெரிக்கா தொடர்ந்து ஈரான் மீது குற்றம்சாட்டி வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈரானின் முன்னாள் தலைவர், மேலும் கூறுகையில், ஈரான் பயங்கரவாதத்திற்கு உதவி வழங்கி வருவதாக அமெரிக்கா உலகளாவிய ரீதியில் விமர் சித்து வருவது ஒரு வெட்கக் கேடான விடயம் என்றும் கூறி யுள்ளார்.

# ‘சார்ஸ்’ நோய் கட்டுப்பாட்டில்

(பீஜிங்)

சீனா உட்பட பல்வேறு நாடு களில் சார்ஸ் நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த 02 நாட்க ளாக சார்ஸ் நோயாளி எவரும் இனங்காணப்படவில்லை என்று சீன அரசு அறிக்கைவிடுத்து ள்ளது.

எனினும் சார்ஸ் நோயாளி 02 பேர் இறந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதன் மூலம் சீனாவில் சார்ஸி னால், இறந்தவர்களின் எண்ணி க்கை 356 ஆக உயர்ந்துள்ளது

# பயணிகள் தொடரூந்து விபத்தில் இருவர் பலி ;10 பேருக்கு காயம்

## – இந். ஆந்திரமாநிலத்தில் சம்பவம்

(சென்னை)

இந்தியாவின் ஆந்திராவில் பயணிகள் தொடருந்து நேற்று முன்தினம் தடம்புரண்டு 02 பேர் உயிரிழந்துள்ளனர், 10 பேர் காயமடைந்துள்ளனர்.

பஞ்சாப், பீகார், மகாராஷ்ரா, ஆந்திரா என பல மாநிலங்களில் ஓடும் தொடருந்துகளில் தீ பிடிப் பதும், தடம்புரள்வதும் நாள் தோறும் நிகழும் சம்பவங்களா கிவிட்டன.

கடந்த 02 வாரங்களில் 10ற் கும் மேற்பட்ட தொடருந்து விபத்துக்கள் நிகழ்ந்துள்ள நிலையில் ஆந்திராவில் மணல் ஏற்றிச் சென்ற பார ஊர்தியுடன் மோதிய பயணிகள் தொடருந்து 02 பெட்டிகள் தடம் புரண்டதில் 02 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

# “சுக்காய்” விமான உற்பத்தி சாதனங்களை இந்தியாவிற்கு வழங்க ரஷ்யா இணக்கம்

(புதுடில்லி)

சுக்காய் விமானத்தை இந்தியா வில் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்களை வழ ங்குவதற்காக ரஷ்யாவுக்கும் இந்திய அரசுக்குச் சொந்தமான ஹிந்துஸ்தான் விமான தொழிற் சாலைக்குமிடையே உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டுள் ளது.


நாஸிக்கிலுள்ள விமானத் தொழிற்சாலையில இந்தப் போர் விமானங்கள் உற்பத்தி செய்யப் படும்.

ஒவ்வொரு கோடி அமெரிக்கா டொலர் பெறுமதியுள்ள சாதனங் கள் இதற்கு வழங்கப்படவுள் ளது. மிக்- 21, மிக் - 27 ரக விமான உற்பத்திகளைப் படிப்படியாக அகற்றி, 140- சுக் காய் விமானங்களை உற்பத்தி செய்ய இரு நாடுகளுக்குமி டையே உற்பத்தி செய்யும் உரிமை ஒப்பந்தத்தின் அடிப் படையில் கைச்சாத்திடப்பட்டு ள்ளது. சர்வதேச ஆயுத பரவல் தடை மூலம் தடை செய்யப்பட்ட சாதனங்கள் எதுவும் இதில் அடங்காது.

சுக்காய் விமானங்களுக்கான என்ஜின்களை உற்பத்தி செய்வ தற்கான தொழில்நுட்ப பரிமாற் றம் ஏற்கனவே வழங்கப்பட்டு இந்தியாவில் பரோபட் தொழிற் சாலையில் வேலைகள் நடந்து வருகின்றன.




இரண்டு Ak 47 ரக துப்பாக்கிகளால் பணியாவிமான நிலையத்தை நோக்கித் தாக்குதல் நடத்த முற்படும் கொங்கோ தேசாபிமான படைவீரர் ஒருவர்.



இரு பயணிகள் பலியாகி 30 பேர் வரை காயங்களுக்குள்ளான ஸ்பெயின் சின்சிவா என்ற இடத்தில் நிகழ்ந்த ரயில் விபத்து.



தமது ஓய்வூதியத்தை மாற்றியமைக்க அரசு எடுக்கும் நட வடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் பிரான்ஸ் அரச ஊழியர்கள் பிரதமர் பியரே ரெபரின் உட்பட அமைச்சர்களின் உருவப்படங்களை ஏந்தி வீதியில் ஊர்வலமாக செல்கின்றனர்.



சிட்னி மிருக காட்சிச்சாலையில் குழந்தை கொரில்லா ப்ராலா தாயின் முதுகில் அமர்ந்திருக்கிறது.



பாங்கொக்கில் உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் நாகபாம்பை வாயிற்குள் திணிக்கும் பெண்.



01. அமெரிக்காவிலுள்ள நயாக்கரா நதி எவ்வாறு உருவானதாகக் கூறப்படுகின்றது?
* 1200 ஆண்டுகளுக்கு முன்பு பனிக்கட்டிப் பாறைகள் உருகியதால்.

02. நின்ற நிலையில் உறங்கும் மிருகங்கள் எவை?
* யானை, ஒட்டகச்சிவிங்கி.

03. எவறெஸ்ட் சிகரத்தில் இதுவரை எத்தனை பேர் ஏறிச் சாதனை படைத்துள்ளனர்?
* 1630 பேர்

04. முதல் குளோனிங் குழந்தையின் பெயர் என்ன?
* ஈவ்.

05. உலகிலேயே மிகப் பெரிய முட்டையிடும் தற்போது அழிந்துவிட்ட பறவை எது?
* எலிபென்ட் பறவை.

06. அமெரிக்காவில் ஈக்கள் இல்லாத மாநிலம் எது?
* அலாஸ்கா மாநிலம்.

07. உலகில் கால்பந்தாட்ட வீரர்களில் அதிக ஊதியம் பெறுபவர் யார்?
* டேவிட் பெக்காம் (நியூசிலாந்து).

08. உலகில் வனவளத்திற்குப் பெயர் பெற்ற நாடுகள் எவை?
* பர்மா, மலேசியா, இந்தோனேசியா.

09. ஞாயிறு விடுமுறை எந்த ஆண்டில் தொடங்கியது?
* கி.மு. 321 ஆம் ஆண்டில்.

10. வருடம் முழுவதும் மூடாத கடை எங்கேயுள்ளது?
* லண்டனில் பிக்காடிலி சர்க்கஸ் (Piccadilly Circus)

11. உலக நாடுகளில் எந்தப் பறவையின் எச்சில் சூப் போட்டு குடிக்கப்படுகின்றது?
* ஸ்வீப்லெட் இனப் பறவை.

12. இலங்கையில் முதலாவது பெண்கள் பாடசாலை எது?
* உடுவில் மகளிர் கல்லூரி.

13. உலகில் மிகவும் சனத்தொகை கூடிய நகரமாகக் கருதப்படுவது எது?
* சீனாவின் ஷங்காய்.

14. ஐ.நா.சபையின் கல்வி கலாச்சார ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள இடம் எது?
* நெதர்லாந்தில் ஹேக் நகரில்.

15. கருணைக் கொலையை சட்டபூர்வமாக்கியுள்ள நாடு எது?
* நெதர்லாந்து.

16. இந்திய மாநிலங்களில் அதிக மாசு நிறைந்த மாநிலமாக கூறப்படுவது எதை?
* மகாராஷ்டிரா.

17. எந்த இரத்த வகையைச் சேர்ந்த மனிதர்கள் குறைவான ஆண்டுகள் வாழ்வதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்?
* O வகையினர்.

18. உலக புகைத்தல் தடுப்பு தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
* மே, 31.

19. இந்த ஆண்டு உலகில் மிகப் பெரிய பணக்காரர் யார்?
* அமெரிக்க பிரஜை பில்கேட்ஸ்.

20. கோழி முட்டைக்கு நிகராக உருவாக்கப்பட்ட முட்டையின் பெயர் என்ன?
* டயட் முட்டை.

21. உலக சூழல் பாதுகாப்பு தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
* யூன் - 05.

22. அ) தென் மத்திய ஆபிரிக்க நாடான சாம்பியாவின் தலைநகர் எது?
* லுசாகா.

ஆ) இந்த நாட்டின் முக்கியமான வருமானந்தரும் பொருள் எது?
* செம்பு.

23. ஹராரேயை தலைநகராகக் கொண்ட சிம்பாவ்வேயின் மொத்த பரப்பளவு எத்தனை சதுர கிலோ மீற்றர்?
* 391,000 ச.கி. மீற்றர்.

24. மனித தொடை எலும்பு எவ்வளவு பாரத்தைத் தாங்கும் என விஞ்ஞானம் கூறுகின்றது?
* 1636 கி.கி

25. செவ்வாய்க் கிரகத்துக்கும், வியாழனுக்குமிடையே காணப்படும் குட்டிக் கிரகத்தின் பெயர் என்ன?
* அஸ்டிராய்ட்ஸ்

# ஸ்விப்லெட் பறவை

தான் இட்ட முட்டையை அடைகாக்க தனது எச்சிலைக் கொண்டே கூடு கட்டுகிறது அந்தமான் தீவில் வனப்பகுதியில் வசிக்கும் 'ஸ்வீப்லெட்' இன அபூர்வ பறவை. அதிலேயே 'குடும்பம்' நடத்திக் குஞ்சுகளையும் இனவிருத்தி செய்யும். இப்படியாக நடந்து கொண்டிருக்கும் ஒரு மகிழ்ச்சியான பறவை குடும்பத்தைக் கலைத்து கூட்டடைப்பறித்து காசாக்கி வருகின்றனர் அந்தமான் வாசிகள். அந்தமான் தீவுகளில் மட்டும் அரிதாகக்காணப்படும் ஸ்வீப்லெட் எனப்படும் மிகச்சிறிய பறவையின் கூடுகள் ஆஸ்துமா நோயைக் குணமாக்கும் மருத்துவ குணங்களைக் கொண்டிருப்பது தான் இதற்குக் காரணம். இதன் சக்தியே இதற்கு ஆபத்தாகவும் மாறிவிட்டது.

அளவில் 12செ.மீ. நீளமுள்ள இந்த ஸ்வீப்லெட் பறவைகளின் கூடுகள் அதிக புரோட்டின் சத்து நிறைந்ததாகவும், ஆஸ்துமா நோயைக் குணமாக்கும் மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளதாகவும் இருப்பது ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது. இதன் கூடுகள் ஒரு கிலோ எடைக்கு 86,000 ரூபாமுதல் 1,72,000 வரை விலைபோகிறது. உலகிலேயே மிக அதிகமாக விலை மதிக்கப்படும் விலங்கின பொருள் இதுதான் என பறவை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஸ்வீப்லெட் பறவையின் எச்சில் நீர் வெள்ளையாக இருக்கும். இதனுடன் வேறு எந்த இரசாயனப் பொருளும் கலக்கவில்லை. புரோட்டின் சத்து நிறைந்த இந்த கூடுகளுக்குத் தான் மார்க்கெட்டில் அதிகம் மதிப்புள்ளது.கூட்டை சூப் செய்து சாப்பிடும் பழக்கம் சீனா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளது. இந்தக் கூடுகளின் சூப்பைச் சாப்பிடுவதால் ஆஸ்துமா நோய் குணமாகிறது என மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்தப் பறவைகளின் கூடுகள் பணத்திற்காக குஞ்சு பொரிப்பதற்கு முன்பே வலுக்கட்டாயமாக அபகரிக்கப்படுகிறது. வனத்துறை அதிகாரிகள் இதைத் தடுக்க பல நடவடிக்கைகள் எடுத்தும் எந்த முன்னேற்றமும் இல்லையாம்.

# 3,50,000 ஆண்டுகளுக்கு முந்தைய மனிதனின் பாதச்சுவடு

3 இலட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற மனிதரின் பாதச்சுவடுகளை ஆராய்ச்சியாளர்கள் கண்பிடித்து இருக்கிறார்கள். மனிதன் எப்போது தான் படைக்கப்பட்டான் என்ற கேள்விக்கு இன்னும் ஆதாரபூர்வமாக விடை காணப்படவில்லை. அந்த நிலையில் 3,50,000 ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற மனிதரின் பாதச்சுவடுகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து இருக்கின்றார்கள். தெற்கு இத்தாலியில் எரிமலை சாம்பலில் 3 ஜோடி பாதச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாக் கண்டத்தில் வாழ்ந்த ஹோமோஹெய்டெல்பர் ஜென்சிஸ் இனத்தைச் சேர்ந்த மனிதனின் பாதச்சுவடுகள்தான் அவைகள் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். சில கைத்தடங்களும் கிடைத்துள்ளன. தற்போது அவைகள் பற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது.

# 65 அடி நீள திமிங்கலம்

65 அடி நீள திமிங்கலம் செயற்கைக்கோள் மூலம் அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணித்து மேற்கண்ட தகவல்களை நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர். கடலில் வாழும் மீன் இனங்களிலேயே மிகவும் பெரியது திமிங்கலம். அது 65 அடி நீளம் வரை வளரக் கூடியது. கடலில் 3,300 அடி ஆழம் வரை செல்லும்.

ஆழ்கடலில் சதுர அங்குலத்திற்கு 1,500 இறாத்தல் அழுத்த நிலையைத் தாங்கக் கூடியது. கடலில் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் பயணம் செய்யும். பெண் திமிங்கிலம் ஒரே நேரத்தில் 300 குட்டிகளைப் போடும்.

கடலிலுள்ள சிறிய மீன்களை அந்தத் திமிங்கில சுறா உணவாகக் கொள்கிறது. மற்றைய மீன்கள் இடும் முட்டையை அவை விரும்பிச் சாப்பிடும். அதற்காக மணிக்கணக்கில் காத்திருக்குமாம். திமிங்கில சுறாக்களின் உடலில் தகவல் தொடர்புச் சாதனத்தை இணைத்து செயற்கைக் கோள் மூலம் அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணித்து மேற்கண்ட தகவல்களை நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர்.



# தேவாங்கின் விலை 1,000 டொலர்கள்

கோலாலம்பூரில் நடைபெற்ற சர்வதேச பொருட்காட்சியில் தேவாங்குக் குட்டி ஒன்று 1,000 டொலருக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. மலேசியாவைச் சேர்ந்த கோலாலம்பூரில் காட்சி நடைபெற்றது. அதில், பிறந்து 11 மாதங்களேயான, சிக்கோ என்ற தேவாங்குக் குட்டியே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

# ரேடியோவில் HERTZ (HZ) என்பது என்ன?

1895இல் இத்தாலிநாட்டு Guglielmo Marconi முதன்முதலில் ரேடியோ அலைகளை அனுப்பியும், பெறவும் செய்தார். (முதலில் அனுப்பிய தூரம் ஒரு கிலோமீற்றர்தான்) இன்றைய ரேடியோ அலைவீச்சு பல்லாயிரம் மைல் தொலைவிற்கு அனுப்பப்படுகிறது. அதுவும் அயன மண்டலத்தில் மோதும் ரேடியோ அலைகள் மீண்டும் பூமிக்கே அனுப்பிவிடுவது இயற்கை நமக்கு அளித்த அனுகூலமான பரிசாகும்.

இலண்டனில் ஒலிபரப்பாகும் B.B.C. நமக்குக் கிடைப்பது இப்படித்தான். இன்று உலகம் முழுவதும் பல்வேறு ரேடியோ ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளது. அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரிசை (Frequency) கொண்டு ஒலிபரப்புகிறது. அதன் ஒலியலையின் நீளம் hertz எனப்படுகிறது. இதை நம் ரேடியோவில் அலைவரிசை (Tuning seale) வரைபடத்தில் பார்க்கிறோம். உதாரணத்திற்கு 200 Kilo hertz (KHZ) என்பது ஒரு விநாடியில் செல்லும் 2,00000 ரேடியோ அலைவீச்சாகும். Heinrich hertz என்பவர் ரேடியோ அலையை 1887.இல் கண்டுபிடித்தார். ரேடியோ அலை அளவீடு அவர்பெயராலேயே அழைக்கப்படுகிறது. (சசி)

# உடற் பருமனைக் குறைக்க புதிய மருத்துவ சிகிச்சை

பொதுவாக சருமத்தின் அடியில் படியத் தொடங்கும் கொழுப்பு நாளடைவில், தசை நார்களில் தேங்கிவிடுகின்றது.

குறிப்பாக பெண்களின் இடுப்பு, தொடை, பிருஷ்டம், அடிவயிறு, கைகள், கீழ்கன்னப் பகுதி, மேல் முதுகு ஆகிய இடங்களில் அதிகளவு கொழுப்புப் படிகின்றது.

கொழுப்பு அதிகரிப்பதால் எடை கூடி உடல் தனது வடிவத்தை இழக்கின்றது. இது பல் வேறு உளவியல் பிரச்சினைகளைத் தோற்று வித்து விடுகின்றது.

1970 இல் பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்ட சிகிச்சையின் பெயர்தான் லைப்போசக்ஷன். என்றாலும் இவ் சிகிச்சை முறை தற்போது தான் பிரசித்தி பெற்று வளர்ச்சியடைந் துள்ளது.

முதலில் நோயாளியின் உடம்பில் கொழுப்பு நீக்கப்பட வேண்டிய இடங்கள் அடையாளம் காணப்படுகின்றது. பின்னர் சருமத்தையும், சதையையும் பிரிக்கும் "என்சை" ஒன்று நோயாளியின் உடலுக்குள் செலுத்தப்படு கின்றது. இந்த "என்சைம்" கொழுப்பை இளக்கி வெளியேற்ற உதவுகின்றது.

சிகிச்சைக்கு முன்னர் நோயாளிக்கு மயக்க மருந்து செலுத்தப்படுகின்றது. பின்னர் சருமத்தில் 5 எம்.எம். அளவில் துளையிடப் பட்டு, அதில் ஒரு எவர்சில்வர் குழாய் பொருத் தப்படுகின்றது. அதன் மறுமுனையானது சக் ஷன் மெஷினுடன் இணைக்கப்படுகின்றது.

சக்தி வாய்ந்த எதிர்மறை அழுத்தங்களை உண்டாக்கும் சக்ஷன் மெஷினால் உடம் பிலுள்ள தேவையற்ற கொழுப்பு உறிஞ்சி எடுக்கப்படுகின்றது.

இச் சிகிச்சை மூலம் சுமார் இரண்டரை முதல் மூன்று லீட்டர் வரை கொழுப்பு அகற் றப்படுகின்றது. இதனால் நரம்புகளோ இரத்த தமனிகளோ சேதமடைவதில்லை. ஒரே சமயத்தில் அதிகளவு கொழுப்பு உறிஞ் சப்படும் நபருக்கு இரத்தம் ஏற்றுவது அவ சியம்.

ஆரோக்கியமான சருமம் கொழுப்பு உறிஞ் சப்பட்ட பிறகு சுருங்கி சாதாரண நிலைக்குத் திரும்பிவிடும். எனவே இளம் வயதினர் மற்றும் நடுவயதினருக்கு இந்த சிகிச்சை முழுத்திருப்தியை அளிக்கும்.

50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சரு மத்தின் சுருங்கி விரியும் தன்மை குறைவதால், மேலதிகமான சருமம் அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்படவேண்டியிருகின்றது.

இச்சிகிச்சைக்குப் பின்னர் உடல் மீண்டும் குண்டாகி விடுவதில்லை. ஏனெனில் முதிர்ச்சி அடைந்த கொழுப்பு செல்கள் அளவில் அதிகரிக்குமே தவிர, அவற்றின் எண்ணிக்கை பெருகுவதில்லை. அறுவைச் சிகிச்சையின் பின்னர் பல மாதங்கள் வரை நோயாளியின் உடல் எடை குறையவே செய்கின்றது.

அறுவை சிகிச்சையின் பின்னர் நோயா ளிக்கு5-8 நாட்கள் இறுக்கமான உடைகள் அணிவிக்கப்படுகின்றது. இது சருமத்தை சுருங்கச்செய்வதற்கும் வீக்கத்தைக் குறைப் பதற்கும் அவசியமாகின்றது.

நோயாளி முழுமையாகக் குணமடைய 2-4 மாதங்கள் வரை ஆகும் என்றாலும் 2 வாரங்களில் நோயாளியால் சாதாரண நிலைக்கு வரமுடியும் என்றும் கூறப்படுகின்றது.

முதல் முறையிலேயே தேவையற்ற கொழுப்பு முழுவதும் நீக்க முடியாத போது நோயாளி இரண்டாவது முறையும் சிகிச்சை மேற்கொள்வது அவசியம்.

"லைப்போசக்ஷன்" 90 சதவீதம் வெற்றி தருவதோடு ஒரு நம்பகமான சிகிச்சையும் கூட.

அத்துடன் இச்சிகிச்சை அமெரிக்கா உள் ளிட்ட பல நாடுகளில் சிறப்புற வளர்ச் சியடைந்துள்ளது என்றும் ஆய்வுகள் கூறு கின்றன.

## தெரிந்து கொள்ள

❖ ரஷ்யாவில் வயல்களில் பனிக்காலத்தில் வெண்பனி மூடிக் கொண்டால், அதை நீக்க விமானத்திலிருந்து நிலக்கரித்தூள் தூவப் படும். காலையில் சூரியஒளி பட்டதும் நிலக் கரித்தூள் சூடேறி படிந்திருக்கும் வெண்பனி உருகி ஓடும்.

❖ ஒரு நாளில் 18 மணிநேரத்தை உணவு சாப்பிடுவதிலேயே யானை செலவிடுகின்றது. இது ஒருநாளில் 300 கிலோ உணவையும். 90 லீற்றர் தண்ணீரையும் குடிக்கும்.

❖ பசுபிக் பெருங்கடல் பகுதி மார்க்விலாஸ் எனும் பழங்குடி மக்களின் பொழுது போக்கு, இறந்த மனிதரின் தொடை எலும்புகளைக் குடைந்து விசித்திரமான சிறுசிறு சிலைகளைச் செய்வதுதான்.

❖ ஆபிரிக்கா காடுகளில் வாழும் டிரை வர்ஸ் எனும் எறும்புகளுக்கு பசி ஏற்பட்டால், படையாகச் சென்று ஒரு யானையையே சாகடித்துச் சாப்பிட்டுவிடும். ஒரு யானையை 03 நாட்களில் சாப்பிட்டுவிடும். இதனால் யானைகள் படையாக எறும்பைக் கண்டு விட்டால், ஓடி நீரினுள் அல்லது சகதிக்குள் இறங்கிக் கொள்ளும்.

❖ கி.பி. 11.ஆம் நூற்றாண்டில் செவில்லி நாட்டை ஆண்டு வந்த மன்னன் அபத் எல்மோ தாகித் தன் அரண்மனையில் தன் எதிரிகளின் மண்டை ஓடுகளை அடுக்கி அதனுள் பூச்செடிகளை வளர்த்தான்.

❖ அமெரிக்காவில் உருளைக் கிழங்கிற்கு டீடீ எனும் பெயரும் உண்டு. உருளைக் கிழங்கைச் சாப்பிடலாம் என கண்டுபிடித்தவர் டீடீ என்பவர் அவர் நினைவாகவே இப்பெயர் வழங்கப்படுகின்றது.

❖ ஜப்பானில் புதுரக கைக்கடிகாரம் தயா ரிக்கப்பட்டுள்ளது. "சீக்கோ கம்பனி யு.எபி. 200" எனும் புதிய கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விஷேசம் என்னவெனில். இக்கடிகாரம் உயரதிகாரி களின் அன்றாட அலுவல்களை நினைவூட்டுவ தாக உருவாக்கப்பட்டுள்ளது.

❖ நேபாளத்தைச் சுற்றி பத்தில் ஒன்பது பங்கு இமயமலையே அரண் போல் அமைந் துள்ளது.

❖ சமைக்கப்படாத காய் கறி, பழங்களில் ஒருவித சூரிய சக்தி இருப்பதாக அமெரிக்கா வைச் சேர்ந்த வைத்தியர் பரிச்சர்வன்னர் கண்டு பிடித்துள்ளார். சமைப்பதனால் இந்த சூரிய சக்தி அழிந்து விடுவதாகவும் இயற்கை யான சூரிய சக்தியை புதிய காய் கறிகள், பழங்களின் மூலமே பெறமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

❖ தமிழில் குறைவான மதிப்பெண்கள் பெற்ற ராஜாஜி தான் எளிய தமிழில் இராமா யணம், மகாபாரதம் முதலியவற்றை எழுதி வைத்துத் தமிழுக்கு சிறப்புச் சேர்த்தார்.

## பூனைக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை

பூனைக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு பிராணிகள் மருத்துவக் கல் லூரி குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. செல்லப் பிராணிகளில் வெளிநாட்டைப் பொறுத்தவரை பூனை முதன்மையானது. செல்லமாக வளர்க்கும் பூனைக்கு சிறுநீரகப் பாதிப்பைக் கூட அமெரிக்க பிராணி வளர்ப்பாளர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். தனது பூனையின் சிறுநீரகத்துக்கு மாற்று சிறுநீரகம் பொருத்த துணை சிறுநீரக தானமும் பெற்றுவிட்டார். இதற்காக பிராணி கள் மருத்துவக் கல்லூரி குழுவிடம் அனு மதி கேட்டார். கடைசியாக பிராணிகள் மருத்துவக் கல்லூரி குழு, பூனை சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையை அங்கீகரித்துள்ளது. அதன் மூலம் செல்லப்பிராணிகளுக்கு இனி மேல் உறுப்புத்தானம மூலம் சிகிச்சை அளிக்க வழி ஏற்பட்டுள்ளது.

## வியாழனை ஆராய அனுப்பிய விண்கலத்தின் ஆயுள் முடிவு

வியாழன் கோளை ஆராய்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் அனுப்பிய கலிலியோ என்ற விண்கலத்தின் ஆயுள் முடிவுக்கு வந்துள்ளது. அது 1989ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது. அந்த விண்கலம் வியாழன் கோளை ஆராய்ந்து அதன் புகைப்படங்கள், வியாழ னின் நிலாக்களின் புகைப் படங்கள், எரிமலை கள், பனி மலைகளின் படங்களையும் பூமிக்கு அனுப்பியது.

கலிலியோவின் ஆயுட்காலம் 6 ஆண்டு களுக்கு முன்னதாகவே முடிந்தது. அதை யடுத்து 3 முறை அதன் ஆயுள் நீடிக்கப் பட்டது. சென்ற ஆண்டு கலிலியோ வியாழ னில் மிக அருகில் சென்று ஆராய்ந்திருக் கிறது. அந்த நிலையில் கலிலியோவின் ஆயுட்காலம் தற்போது முடிவுக்கு வந்துவிட்ட தாக அதன் திட்ட இயக்குநர் எய்லேன் தெய்லிக் அறிவித்துள்ளார். எனவே, கலிலி யோவிடம் இருந்து எந்தத் தகவலும் வராது எனக்கூறபட்டுள்ளது.

## சிந்திக்க சிலவரிகள்

சிரமம் இல்லாமல் எந்த மனிதனும் பெருமையடைவது கிடையாது. (பேயின்)

அதிகம் பேசுபவர்கள் செயல் வீரர்களாக இருப்பது இல்லை. (சேக்ஸ்பியர்)

அன்பு என்பது தியாகமே. அது எதையும் எடுத்துக்கொள்வது இல்லை. கொடுத்துக்கொண்டேயிருப்பதுதான் அதன் இயல்பு. (விவேகானந்தர்)

உறுதி உள்ளவன் உலகைத் தனக்கு வேண்டிய முறையில் அமைத்துக் கொள்கின்றான். (கதே)

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாக்கினிலே தெளிவு உண்டாகும். (பாரதி)

நன்றாக எழுத விரும்புபவன் நன்றாகத் தூங்க வேண்டும். (ராஜாஜி)

நல்லதை எடுத்துக் காட்டுவதே விமர்சனத்தின் உண்மையான நோக்கம். (கோபின்)

## பச்சை மிளகாய் உண்ணும் போட்டி

தாய்லாந்து நாட்டில் விசித்திர மான போட்டி ஒன்று நடத்தப்பட்டுள் ளது.

மிகவும் காரமான மிளகாய் களை உண்பதற்காக வித்தியாச மான போட்டி ஒன்று நடத்தப்பட்டுள் ளது.

இப்போட்டியில் இறுதி சுற்றுக் குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேரின் முன்பாக 250 கிராம் பச்சை மிள காய் வைக்கப்பட்டது.

பார்த்தாலே காரத்தை உணரக் கூடிய இந்த மிளகாய்களை 12 நிமி டத்தில் கடித்து ருசித்து உண்ண வேண்டும் என்பதே போட்டி விதி முறையாகும்.

ஆர்வமுடன் போட்டியாளர்கள் மிளகாயை வாயில் போட்டு சுவைக் கத் தொடங்கியதுமே அவர்களது முகத்தின் மாற்றம் மிளகாயின் காரத்தைப் பிரதிபலித்தது.

இதில் ஹம்ஸா என்பவர் 12 நிமிடங்களில் 250 கிராம் மிள காயைச் சாப்பிட்டு, முதல் இடம் பிடித்து, இரண்டு லட்சம் ரூபா பரிசைத் தட்டிச் சென்றுள்ளார்.

## கொலம்பசின் சமாதி எங்கே?

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பசின் உண்மையான சமாதி எது என்பதில் எழுந்துள்ள சர்ச்சையின் காரணமாக ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகள் தங்கள் நாட்டிலுள்ள கொலம்பசின் உடல் வைக் கப்பட்டுள்ள சவப்பெட்டியைத் திறந்து மரபணு சோதனை நடத்த முடிவு செய்துள்ளனர்.

கொலம்பஸ் 1506ஆம் ஆண்டு ஸ்பெயின் நகரமான வலாஸில் காலமானார் அவரது இறுதி விருப்பத்தின் படி கொலம்பசின் உடல் கவிலின் தீவில் தகனம் செய்யப்பட்டது.

இதுவரை அவரது சமாதி அங்கிருப்பதாகவே நம்பப்பட்டது. இந்நிலையில் டொமினியின் குடியரசு தலைநகரில் கொலம்பசின் பெயர் பொறிக்கப்பட்ட சவப்பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் கொலம்பசின் உண்மையான சமாதி எது என்பதில் ஸ்பெயின் நாட்டிற்கும், டொமினியக் குடியரசிற்கும் இடையே பிரச்சினை எழுந்துள்ளது. இதற்குத் தீர்வு காண ஸ்பெயின் விஞ்ஞானிகள் குழுவினர் தங்களிடம் உள்ள கொலம்பசின் எலும்புகளைக் கொண்டு மரபணு பரிசோதனை நடத்த முடிவு செய்துள்ளனர்.

## செவ்வாய்க் கிரகத்தை ஆராய "மாஸ் எக்ஸ்பிறஸ்"

செவ்வாய்க் கிரகத்திற்கு ஐரோப் பிய நாடுகள் ஒன்றிணைந்து விண் கலம் ஒன்றை அனுப்பியுள்ளன.

"மாஸ் எக்ஸ்பிறஸ்" என்ற இந்த விண்கலம் கடந்த திங்கட்கிழமை மாலை ரஷ்யாவின் கசகஸ்தான் விண்வெளி நிலையத்திலிருந்து வெற்றிகரமாகப் புறப்பட்டுச் சென் றுள்ளது. இந்த றொக்கற் விண் கலத்தின் எரிபொருள் மண்ணெண் ணையாகும். இது ஆறு மாதங்கள் விண்ணில் பயணித்து வரும் நத்தார் பண்டிகை நாளன்று செவ்வாய்க் கிரகத்தை அடையவுள்ளது. பின்னர் அந்த கலத்திலிருந்து பீகிஸ்-2 என்ற சிறிய கலம் பிரிந்து செவ்வாய்க் கிரகத் தரையில் இறங்கி ஆராய்ச்சி களைச் செய்யவுள்ளது. அதில் முக் கியமாக அங்கே உயிரினங்கள் இருக்க வாய்ப்புண்டா குறிப்பாக தண்ணீர் இருக்கின்றதா அன்றி இருந்ததற்கான சான்றுகள் ஏதாவது உண்டா என்பது பற்றி ஆராயும் இந்தப் பணியை மேற் கொள்ள வுள்ளன.

இந்த மூன்று கலங்களில் இரண்டு அமெரிக்கக் கலங்கள் ஒன்று யப்பா னிய கலமாகும்.

## வட்டக்கச்சி லக்கிஸ்றார் விளையாட்டுக் கழகம்

## பொதுக்கூட்டம்

**இடம்:** கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலய மண்டபம்.
**காலம்:** 08-06-2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 02.00 மணி

மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகத்தெரிவு நடைபெற இருப்பதால் அங்கத்தவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகம்.
லக்கிஸ்றார் விளையாட்டுக் கழகம்.

(3309)

## சாவு அறிவித்தல்

## குமாரவேலுப்பிள்ளை நமசிவாயம்

காரைநகர் மூக்கம்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கள்ளித்தெரு தங்கரோடையை வதிவிடமாகவும் கொண்ட குமாரவேலுப்பிள்ளை நமசிவாயம் இலக்கம் 88 புதுச்செட்டித் தெரு, கொழும்பில் 04-06-2003 புதனன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி குமாரவேலுப்பிள்ளை சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகனும், பசறை பிரபல வர்த்தகர், E.V. கார்த்திகேசு, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற தனலெட்சுமி, குலசிங்கம், சரஸ்வதி, கனகசபாபதி (நாதன் மில் உடையார்கட்டு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற பசறை (பிரபல வர்த்தகர்), E.V.K. நாகேந்திரம், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை, காலஞ்சென்ற மார்க்கண்டு, நாகேஸ்வரி சிவலிங்கம் (கொழும்பு), ஈஸ்வரி (உடையார்கட்டு) ஆகியோரின் மைத்துனரும், சிவகுமார் (உடையார்கட்டு), சிவமணி (கொழும்பு), சிவராசகுமார் (கனடா), சிவஞானகுமார் (லண்டன்), சிவனருள் குமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவனேஸ்வரி, நாகரட்ணராசா, நிர்மலாதேவி, வத்சலா, அரியமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி, கணநாதன், கணபாலன், சிவரூபி, சோபிதா, ரேவதி, கஜன், ஜெனனி, அங்கயன், அனார்த்தன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08-06-2003 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ந. சிவகுமார்,
கமநல சேவைநிலையம் முன்பாக,
உடையார்கட்டு வடக்கு.

(3312)

## பகிரங்க ஏலவிற்பனை - 16-06-2003

**காலம்:** 16-06-2003 திங்கள் காலை 11.00 மணிக்கு

**இடம்:** வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், கண்டிவீதி, கிளிநொச்சி.

### ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்

01. எம்.டி.90 - கொண்டா மோட்டார் சைக்கிள் - 01 (தமிழீழ மோட்டார் வாகன பதிவுப் புத்தகத்துடன்)
02. இரும்புப் பணப்பெட்டி (ஒற்றைத் திறப்பு) - 01 (மரத்தாலான தாங்கியுடன்)
03. நீர் இறைக்கும் இயந்திரம் குபோட்டா - 01
04. நீர் விநியோக அல்கத்தின் குழாய் - 125 அடி

மேற்படி பொருட்களை 09ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் உடன் பணம் செலுத்தி அன்றே பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

கண்டி வீதி,
கிளிநொச்சி.
(சி-8143)

தலைவர்,
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நி.
பேரிணையம்.

## தொழிற் பயிற்சி அதிகாரசபையின், கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்திற்கான போதனாசிரியர்களை நியமிப்பதற்கான

# விண்ணப்பங்கள் கோரல்

மூன்றாம் நிலைக் கல்விநிலை அமைச்சின் கீழான இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்கட்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| பயிற்சி இல: | போதனாசிரியர் பதவி. |
|---|---|
| 02 | மோட்டார் சைக்கிள் திருத்துனர். |
| 12 | மின்னிணைப்பு |
| 19 | சாதாரண தையல் |
| 25 | தச்சுவேலை |
| 28 | மேசன் வேலை |

### அடிப்படைக்கல்வித்தகைமை:

க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் தமிழ்/சிங்களம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பப்பாடத்திலும் திறமைச்சித்தியுடன் எல்லாமாக ஆறுபாடங்களில் இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாத தடவைகளில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். தே.க.பொ.த. பரீட்சையில் மேற்குறிப்பிட்ட திறமைச்சித்திக்குரிய பாடங்களுக்கு "பி" பெற்றிருத்தல் வேண்டும்.

### தொழில் நுட்பக்கல்வித் தகைமையும் அனுபவமும்.

- தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ்களுடன் உரிய துறையில் 3 வருட செய்முறை அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது.
- 3வருட தொழில் பயிலுனர் பயிற்சியுடன் 3வருடங்கள் குறிப்பிட்ட தொழில் புரிந்த அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது
- அரசாங்க தொழில் நுட்பக்கல்வி நிலையம் ஒன்றில் 1வருட பயிற்சியை திருப்திகரமாக முடித்தபின் குறிப்பிட்ட துறையில் 5வருட செய்முறை அனுபவமும் இருத்தல் வேண்டும்.
- கணினித் துறையிலான பதவிக்கு விண்ணப்பிப்போர் ஆங்கில மொழியில் திறமைச்சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

### வயதெல்லை

2003-05-31ஆந் திகதியன்று 55க்கு உட்பட்டவராய் இருத்தல்வேண்டும்.

### சேவை நிபந்தனைகள்

ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். மாதாந்தம் ரூபா5000/=க்கும் ரூபா 9000/= க்கும் இடைப்பட்ட தொகை இதற்கான ஊதியமாக வழங்கப்படும்.(இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் இதற்கென அனுமதிக்கப்பட்ட எல்லாக்கொடுப்பனவுகளும் வழங்கப்படும். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்)

### முக்கிய கவனிப்பு:


- நேர்முகப்பரீட்சை மற்றும்செய்முறைப் பரீட்சைமூலம் தேர்வு நடைபெறும்.
- நியமனம் செய்யப்படவுள்ள நிலையமும் வெற்றிடமாகவுள்ள பயிற்சிநெறியும்
- போதனாமொழி சிங்களம் (S) எனவும் தமிழ் (T) எனவும் தரப்பட்டுள்ளன.

### முடிவுத்திகதி

13.06.2003க்கு முன் தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல: 354 எல்விட்டிகல வீதி, கொழும்பு -05 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக விபரங்களை மாவட்ட செயலகம், கிளிநொச்சியில் பார்வையிடலாம்.


தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8144)



## வற்றாப்பளை அம்மன் பொங்கல் திருநாள்

## சிறப்புப் பேருந்துப் பணி



### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

**09.06.2003 ஆம் நாள் திங்கள் கிழமை வற்றாப்பளை அம்மன் கோவிலில் நடைபெறும் பொங்கல் திருநாளை முன்னிட்டு பின்வரும் வழித்தடங்களில் சிறப்புப் பேருந்துப்பணி நடைபெறும்.**

**புதுக்குடியிருப்பு பேருந்து நிலையம், முள்ளியவளை நகர், குமுழமுனை நகரிலிருந்து செம்மலை ஊடாக, நெடுங்கேணியிலிருந்து ஒட்டுசுட்டான் ஊடாக, முத்தையன் கட்டிலிருந்து ஒட்டுசுட்டான் ஊடாக, புளியம்பொக்கணை நகர், மல்லாவி பேருந்து நிலையம், கிளிநொச்சி பேருந்து நிலையம் ஊடாக வட்டக்கச்சி, முழங்காவில் பேருந்து நிலையம் ஊடாக கந்தபுரம், புளியங்குளம் பேருந்து நிலையம், பளை பேருந்து நிலையம் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு வற்றாப்பளை அம்மன் கோவிலைச் சென்றடையும் என்பதை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

குறிப்பு:- திங்கள் கிழமை காலை 8.00 மணியிலிருந்து நாள் முழுவதுமான பணிகள் நடைபெறும்.

பொது முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி:-8140)

**சிந்தனைக்கு**

இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை. கொண்டகொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.




ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 07-06-2003


## நிபந்தனைகளே மிஞ்சும்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எப்பொழுது நிபந்தனைகளைக் கைவிட்டு அரசியல் நடத்தப் போகின்றாரோ என்பது இன்று பலராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகிவிட்டது. ஏனெனில், நிபந்தனைகளைக் கைவிடாத வரையில் அவரின் அரசியல் எதிர்காலம் என்பது கேள்விக்குரியதொன்றாகவே இருக்கும். அத்தோடு அவர் அனுபவத்தில் இருந்து பாடம் கற்காதவர் என்பதையும் இது வெளிப்படுத்துவதாக இருக்கும்.

இறுதியாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விதித்துள்ள நிபந்தனையானது, இடைக்கால நிர்வாகம் பற்றியதுமாகும். இடைக்கால நிர்வாக சபைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தன்னைச் சந்தித்த பிக்குகளின் மத்தியில் உரையாற்றிய அவர் இடைக்கால நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமானால் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதோடு தமிழீழக் கோரிக்கைகளையும் கைவிடவேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் முன்பாகவே எதிர்க்கட்சிகள் (அன்று எதிர்தரப்பாக இருக்கும் யாராகிலும்) அதற்கு எதிரான போராட்டங்களைத் தொடங்குதல் என்பது இன்று நேற்றல்ல ஐம்பதுகளில் இருந்தே நடைபெற்று வரும் அரசியல் மரபாகிவிட்டது. ஆகையினால், இடைக்கால நிர்வாகம் என்பது பற்றிப் பேச்சு எழுந்து/ அதுகுறித்து அரசாங்கம் நகர்வு எதையும் மேற்கொள்ளாதஃ மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படும் போதே எதிர்த்தரப்பினர் இடைக்கால நிர்வாகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். போராட்டங்களை ஆரம்பிக்கவும் தயாராகி விட்டனர். இந்த வகையில் அமைந்த நடவடிக்கைகளில் ஒன்றே இடைக்கால நிர்வாகம் குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளுக்கு விதித்துள்ள நிபந்தனையாகும்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கைகளைக் கைவிடவேண்டும். ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்/ கைவிட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் சனாதிபதி சந்திரிகா தற்பொழுது தான் முன்வைக்கிறார் என்பதல்ல. 1995இன் இறுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்ததில் இருந்தே இந்நிபந்தனைகளை அவர் கூறிக்கொண்டே வருகின்றார். ஆனால் இந்நிபந்தனைகளை எவரும் கேட்பாரில்லை. மாறாக சனாதிபதி அரசியல் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் திறன் அற்றவர் என்ற அபிப்பிராயமே மேலோங்கியுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இனப்பிரச்சினைக்கு ஓர் உறுதியான அரசியல் தீர்வும்/ தமிழ் மக்களின் பாதுகாப்பு முழுஅளவிலும் உறுதிப்படுத்தப்படாத நிலையிலும் ஆயுதங்களைக் கீழே வைத்தல் என்ற பேச்சுக்கு இடமில்லை என்பதை பல தடவைகள் வெளிப்படுத்தியுள்ளது. செயலிலும் காட்டியுள்ளது. அதாவது இந்திய இராணுவம் பெரும் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்த போதும் இதனை ஒப்புக்கொள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராக இருக்கவில்லை.

இதனை விளங்கிக்கொள்ளக் கூடிய எவருமே விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் அன்றிக் கையளிக்க வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைக்க மாட்டார்கள். அவ்வாறு முன்வைத்தால் அதனால் பயன் ஒன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்பது மட்டுமல்ல, அது சமாதான முயற்சிகளுக்கு எதிரான கோரிக்கை என்றே தமிழ் மக்களால் நோக்கவும்படும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா ஆரம்பம் முதலே நிபந்தனை அரசியல் ஒன்றை நடத்தவே முனைந்தார். விடுதலைப்புலிகளுடன் யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து இதுவரையில் அதுதொடர்கதையாகவே உள்ளது. அவர் யுத்தத்தில் வெற்றிகளைப் பெற்ற போதும் சரி, யுத்தத்தில் பாரிய இழப்புக்களைச் சந்தித்தபோதும் சரி அவர் நிபந்தனைகளை விதித்துக்கொண்டே இருந்தார். யுத்த காலத்திலும் அரசியல் சூழ்நிலையிலும் ஏற்பட்ட எத்தகைய மாற்றத்தையும் அவர் கருத்திற்கொள்ளவில்லை.

இதன் விளைவானது பொ.ஐ.முன்னணி அரசாங்கம் தோல்வியைத் தழுவிக்கொள்ள வேண்டியதாகியது. நோர்வே அரசு சமாதான முயற்சிகள் தனது கோரிக்கைகளைத் தொடர்ந்தே ஆரம்பித்தது என சனாதிபதி கூறிக்கொண்டாலும் அதற்கு ஆதரவானதொரு அரசியல் நகர்வை சனாதிபதி சந்திரிகாவினால் எடுக்க முடியவில்லை. ஆனால் அரசியல் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்ட ஐ.தே.முன்னணி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் தயாராகிவிட்ட போதும் பாரிய இராணுவ பின்னடைவுகளைச் சந்தித்திருந்த சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு சமாதானப் பேச்சுக்களுக்குத் தயாராக இருக்கவில்லை. புலிகளின் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும். தமிழீழக் கோரிக்கைகளைக் கைவிட வேண்டும் என்றே கோரிக்கை விடுத்தவண்ணமிருந்தது. ஆனால் நிலைமை அவற்றையெல்லாம் தாண்டிவிட்டது என்பதை அவர் புரிந்துகொள்ளத்தவறிவிட்டார். அன்றி புரிந்துகொள்ள அவர் தயாராக இருக்கவில்லை.

ஆனால், சனாதிபதியின் நிபந்தனைகளால் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமலோ அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலோ இல்லை. இந்நிலையில், சனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் நிபந்தனைகளையே விதித்துவருவாரேயானால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் தாமதம் அடையலாம். அன்றித் தடைப்பட்டும் போகலாம். ஆனால் சனாதிபதி சந்திரிகா இதனால் அரசியல் ரீதியில் பயன்பெறப்போவதில்லை. சனாதிபதி சந்திரிகா நிபந்தனைகளுடன் காத்திருக்க-தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வளர்ச்சி கண்டு வெற்றி பெறுவது தவிர்க்க முடியாததாகிவிடும். அச்சமயத்தில் சனாதிபதிக்கு நிபந்தனைகளைத் தவிர வேறு எதுவும் மிஞ்சப்போவதில்லை.

## ஊனமுற்றோருக்கான தேசிய அமைப்புக்கு அனுமதி வழங்காது சனாதிபதி இழுத்தடிப்பு

### - அமைச்சர் ரவீந்திர சமரவீர

(கொழும்பு)

ஊனமுற்றோருக்கான தேசிய அமைப்பிற்கான அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியலை சனாதிபதி கடந்த ஆறு மாதங்களாக அனுமதிக்காமல் உள்ளதால் அவர்களுக்கான உதவிகளும் சேவைகளும் தடைப்பட்டிருப்பதாக சிறிலங்காவின் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சர் மூலம் 21 பேரைக் கொண்ட மேற்படி பட்டியல் கடந்த நவம்பர் மாதம் சனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக எந்தவித அனுமதியோ மாற்றமோ தெரிவிக்காமல் சனாதிபதி இழுத்தடிப்பதால் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு சமூக சேவைகள் அமைச்சுக்கு முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இது தொடர்பாக சனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தியிடம் பலமுறை எழுத்து மூலமும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு கேட்ட போதும் அவர் ஓய்வில் செல்லும் வரை ஒரு பதிலும் கிடைக்கவில்லை என அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

## இரு கோரிக்கைகளை முன்வைத்து 10 ஆம் திகதி வேலை நிறுத்தம்

### - அரச மருத்துவ அதிகாரிகள் தீர்மானம்

(கொழும்பு)

இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 10ஆம் திகதி நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை மேற்கொள்வது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

சம்பள முரண்பாட்டை போக்குவது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்து சட்ட அங்கீகாரம் பெறவேண்டும். வடக்கு - கிழக்கிற்கு சென்றிருக்கும் மருத்துவர்களுக்கு ஒன்றரை வருடமாகச் செலுத்தப்படாது இருக்கும் விசேட இடைக்கால கொடுப்பனவைக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை இந்தச் சங்கம் முன்வைத்துள்ளது.

## பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்தால் எனக்கு ஆபத்து வெளிநாடு செல்ல அனுமதியுங்கள்

### - உடத்தலவின்ன கொலை வழக்கில் சாட்சி கோரிக்கை

(கொழும்பு)

பொ.ஐ.மு. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமக்கும் குடும்பத்தினருக்கும் ஆபத்து என்றும் வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு கொலைச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி, சாட்சிக் கூண்டை விட்டு வெளியேறும் போது கூறியுள்ளார்.

கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற உடத்தலவின்ன படுகொலை தொடர்பாகச்சாட்சி மேலும் கூறியதாவது தம்மோடு வாகனத்தில் பயணம் செய்த பைசர் என்பவரை நோக்கி சானக்க ரத்வத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் மேலும் 5ஆம், 6ஆம், 8ஆம், 9ஆம் சந்தேக நபர்களும் திட்டமிட்டே றிஸ்வான், சபார் மற்றும் நஸ்மி ஆகியோரை நோக்கிச் சுட்டதாகவும் சம்பவத்தை நேரில் கண்ட மேற்படி சாட்சி உயர்நீதி மன்றில் தெரிவித்துள்ளார்.

2001 கார்த்திகை மாதம் தந்தையின் கடையில் வேலை செய்ததாகவும் ஐ.தே.க. கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்,அலங்கரித்தல், ஆதரவாளர்களைத் திரட்டுதல் போன்ற வேலைகளில் தாம் ஈடுபட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## உலக வங்கிப் பிரதிநிதிகள் நியாப் திட்டத்தைப் பார்வையிட்டனர்

(அலுவலக செய்தியாளர்)

நியாப் வேலைத் திட்டங்களை உலக வங்கிப் பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர்.

2002 ஆம் ஆண்டில் கிளி/ வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை நேற்று முன்தினம் பார்வையிட்டதோடு வன்னேரிக்குளம் பகுதியில் பொது மண்டபம் ஒன்றும் உலக வங்கிப் பிரதிநிதிகளால் திறந்து வைக்கப்பட்டது.அத்துடன் ஆனைவிழுந்தான் இலக்கு கிராமத்தின் வேலைத் திட்டங்களையும் பார்வையிட்ட உலக வங்கிக்குழு கடனுதவிப் பயன் திட்ட பயனாளிகளின் செயற்பாட்டு முன்னேற்றங்களையும் பார்வையிட்டுள்ளனர்.

நியாப் திட்டங்களைத் தவிர இக் கிராமங்களின் ஏனைய தேவைகளையும் நிறைவேற்றித் தரவேண்டுமென உலகவங்கிப் பிரதிநிதிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (பா)

## பொ.ஐ. முன்னணியினர் மீதான தாக்குதலுக்கு நிறைவேற்று அதிகாரத்தால் நடவடிக்கை வேண்டும்

### - கட்சி உறுப்பினர் சனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோர் மீது நடாத்தப் பட்டுவரும் தாக்குதல்களுக்கு எதிராக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் பொ.ஐ.மு.வின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே பொ.ஐ.மு.வைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் மேற்படி கருத்தினை வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்தும் தேசிய லொத்தர் சபையைப் பொறுப்பேற்றுக்கொண்டது தொடர்பாகவும் சனாதிபதி சந்திரிகா விளக்கமளித்ததாகத் தெரிய வருகிறது.

தென்மாகாண அமைச்சர் சண்டிமல்லி கொல்லப்பட்ட சம்பவத்தில் அரசாங்கம் பாரபட்சமாக நடப்பதாகவும் இதனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொ.ஐ.மு. பிரமுகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் போட்டி

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் போட்டிகளில் இன்று பெல்ஜியத்தின் கிம் கிளை ஸ்ரேஸ், ஜஸ்டின் ஹெனினும் மோதுகின்றார்கள்.

இறுதிப் போட்டியில் பெல்ஜியத்தை சேர்ந்த இருவர் மோதுவது இதுவே முதல் முறையாகும்.


நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான அரையிறுதிப் போட்டியில் கிளைம் கிளைஸ்டேஸ் 7.5, 6.1 எனும் செட் கணக்கில் ரஷ்யாவின் நாடியா பெற்றோவாவைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

மற்றொரு அரையிறுதியில் முன்னணி வீராங்கனை ஷெரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளார்.

பரபரப்பான போட்டியில் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 6.2, 4.6, 7.5 எனும் செட் கணக்கில் ஷெரீனாவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்குள் நுழைந்துள்ளார்.

கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் மகேஸ் பூபதி ரஷ்யாவின் எலினாலிஸ் கோவா இணை தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இந்த இணை 3.6, 6.2 எனும் செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.



# இடைக்கால நிர்வாக சபை குறித்து அரசு தனது கருத்தை வெளியிட வேண்டும்

## ம.ஐ.மு.தலைவர் தினேஷ் குணவர்த்தன

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் குறித்து சிறிலங்கா அரசு தனது கருத்தை வெளியிட வேண்டும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் கருத்தை அறிய விரும்பும் சிறிலங்கா அரசு முதலில் தனது கருத்தை வெளியிடவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து பொதுவான யோசனை ஒன்றை முன்வைக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தின் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு சனநாயக அரசியலுக்கு திரும்ப வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள அவர் இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்பட்டால் அதில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என அழுத்திக் கூறியுள்ளார்.

## - ஊடகவியலாளர் மீதான தாக்குதல்-

# விசாரணைக்குழுவின் விசாரணை நேற்று முடிவடைந்தது

வடகிழக்குப் பகுதிகளில் கடந்த காலத்தில் படையினரால் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டசம்பவம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்கு குழு நேற்றுடன் தனது விசாரணைகளை முடித்துக் கொண்டது.

ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையிலான இக் குழு யாழ் குடாநாட்டில் விசாரணைகளை மேற்கொண்டது. இறுதி நாளான நேற்று இடம்பெற்ற விசாரணைகளில், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ் வதிவிடப்பிரதிநிதி ஒலே புருண்டம் மானிப்பாய் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற போராளிகள் மீதான தாக்குதலை அடுத்து செய்திசேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்டசம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற இந்த விசாரணைகளில் பல ஊடகவியலாளர்களும் தமது வாக்கு மூலங்களை அளித்துள்ளனர். (27)

### இடைக்கால நிர்வா...

கொடுத்தால் அவர்கள் தமது கடற்படையையும், இராணுவப் படையையும் சட்டரீதியாக்கி விடுவார்கள். இதன் பின் சர்வதேச சமூகத்திற்கும் எதுவும் செய்ய முடியாது போய்விடும்.

இந்நிலை தொடர்ந்தால் சைப்பிரசில் இருப்பது போல ஒரு தேசத்திற்குள் இரண்டு நாடுகள் போன்ற நிலையையே தோற்றுவிக்கும் என மேலும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பொ.ஐ.முன்னணியும், ஐ.தே.கட்சியும் பொது இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இன்னமும் காலஅவகாசம் இருக்கிறது.

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டுக்குப் பின்னர் இந்நிலை ஏற்படும்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் உள்ளடக்கத்தில் விடுதலைப்புலிகள் கடுமையாக தமது நிலைப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

அன்ரன் பாலசிங்கம் அவர்களிடம் இருந்த பிரதிபலிப்புக்கள் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. அழகான வார்த்தை ஜாலங்களால் முன்வைக்கப்பட்ட இந்த வார்த்தைப் பிரயோகங்களுக்குப் பல்வேறு அர்த்தங்களைக் கொள்ளலாம். இந்தக் கடிதங்கள் அனைத்தும் இராஜதந்திர வார்த்தைகளில் எழுதப்பட்டிருந்தன. இதன் மூலம் விடுதலைப்புலிகள் சிந்தித்து திட்டமிட்டு செயற்படுவது வெளிப்படுகின்றது.

விடுதலைப்புலிகளுடன் நிலையான கொள்கையுடன் இருந்து கொண்டு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் நெகிழ்வுத்தன்மை இல்லா நிலையில் அரசு புலிகளின் முன்னால் தலை குனியக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

அதனால், இதனைவிட ஒரு ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய நிலை தற்போது எழுந்துள்ளது என மேலும் கூறினார்.

### டோக்கியோ...

சிறிலங்காவிற்கு வந்த இவர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார். சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## -மாணவர் எழுச்சி நாளில்-

# மாணவர்கல்வியை மேம்படுத்த வங்கி நிதியம் அறிமுகம்

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமியவங்கியினூடாக வன்னியிலுள்ள கல்வியில் நலிவுற்று மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக வங்கிநிதியமொன்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் கிளிநொச்சிமாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒன்று கூடல் மண்டபத்தில் மாவட்டப் பொறுப்பாளர் சவுந்தர் தலைமையில் ஆரம்பமாகியது.

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் முதற்கட்டமாக 40 மாணவர்களுக்கு இந்நிதியம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர் கிளிமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி மகளிர்அரசியல்பொறுப்பாளர் செல்வி ஆவர்த்தனா தமிழீழ மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் ஆகியோர் இந் நிதியத்தின் அவசியம் இதன் பயன்பாடு பற்றி சிறப்புரை ஆற்றியதுடன் சாள்ஸ் அன்ரனி படையணி சிறப்புத் தளபதி நகுலனும் ஏனைய பொறுப்பாளர்களும் வங்கி வைப்புப் புத்தகத்தினை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கினர்.

### தேசத்தை...

கையை - தமது கல்வியை வளர்த்துக்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் பற்றாக்குறைகளுக்குள்ளும் கடந்த 30 வருடங்களாக புதிய பாய்ச் சலுடனும்புதிய வீரியத்துடனும்எமது மாணவ சமூகம் வளர்ந்தது.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் கல்வியை மிகவும் முக்கிய அம்சமாகத்தான் கருதுகின்றான். கல்வி கற்கவில்லை என்றால் வாழ்க்கையை இழக்கின்றான். கற்றவன் என்றால் உலகமே அவன் காலடியில் வந்து நிற்கின்றது.

எங்களது மாணவர் சமூகம் நாளாந்தம் புதிய புதிய விடயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு கற்பதால் ஏற்படுகின்ற சிந்தனைகள் உருவாக்கங்கள் என்பன எமது தேசத்தை, எதிர்காலத்தை கட்டியெழுப்புகின்ற மூலவளமாகப் பயன்பட வேண்டும் என்பது தான் எமது பேரவா. இதனை எமது மாணவச் செல்வங்கள் அனைவரும் தமது மனங்களில் நன்றாக இருத்திக் கொள்ள வேண்டும்.

எமது மாணவர்களின் கல்வியை வளம்படுத்த ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை போன்ற பல்வேறு பற்றாக்குறைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.பள்ளி செல்ல வேண்டிய வயதில் ஒரு நேர உணவைக்கூட உட் கொள்ள முடியாது சிறுவயதினிலேயே தொழிலாளர்களாக மாறி தொழில் புரிகின்ற இளம் பிஞ்சு உள்ளங்கள் பலவற்றை நாம் காண்கின்றோம். அத்தகைய உங்கள் சகோதரர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கக்கூடிய சிறந்த கல்வியாளர்களாக உங்களை மாற்றியமைக்க வேண்டும்.

எனவே சிறப்பான கல்வியைக் கற்று ஒரு ஒளிமயமான வாழ்க்கைக்கு உங்களை நீங்கள் தயார்ப்படுத்துங்கள். இந்தத் தேசம் உங்களின் உழைப்பால் நிச்சயம் வளரும். நாளை இந்தத் தேசத்தில் எங்களின் அடுத்த சந்ததி பற்றாக்குறையில்லாத ஒரு சிறந்த வாழ்க்கையைவாழும்நீங்கள்கல்வி கற்பது இந்த தேசத்திற்கும் தேவையான தொன்று எனத்தெரிவித்தார். (வோ).

# பெரும் எழுச்சியுடன்.....

## கிளிநொச்சி சந்திரன் பூங்காவில்

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என ஆயிரக் கணக்கானோர் ஒன்று திரண்டு பேரணி ஒன்றை நடத்தினர்.பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பு முன்னே நகர அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியத் தலைவரின் பெரியளவிலான உருவப் படத்தையும் அதனைத் தொடர்ந்து பொன். சிவகுமாரன், முன்னாள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப்படங்களையும் தாங்கியவாறு மாணவர்கள் செல்ல தொடர்ந்து மாணவர் களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் பேரணியாக நகர்ந்து சந்திரன் பூங்காவைச் சென்றடைந்தனர் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் சிறப்புரைகளை கிளி. வலயக் கல்விப்பணிப்பாளர் அரியரத்தினம், அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர்.

## நெடுந்தீவில் முதற்தடவையாக

நெடுந்தீவில் மாணவர் எழுச்சி நாள் நேற்று உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு நெடுந்தீவில் அமைந்துள்ள மாவீரர் நினைவுச் சுடரின் அருகாமையில் 2000க்கும் அதிகமான மாணவர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்தை வந்தடைந்தனர். நெடுந்தீவு தமிழீழ மாணவர் ஒன்றியத் தலைவர் யோசப் தனுசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை நெடுந்தீவின் துணைப் பொறுப்பாளர் மாறன் ஏற்றி வைத்தார். பொதுச் சுடரை நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரியும், நினைவுச் சுடரை பாடசாலை அதிபரும், தியாகி சிவகுமாரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலையை சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் தளபதியும் அணிவித்தனர்.

சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் போராளி, மதகுருமார்கள், அதிபர்கள், மாணவர்கள் மாணவர் எழுச்சி நாள் பற்றி உரை நிகழ்த்தினர்.அதனைத்தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. காலை 9.00 மணிக்கு ஆரம்பமான நிகழ்வு மாலை 3.30 மணி வரை இடம்பெற்றது.

இதுவரை காலமும் நெடுந்தீவில் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு என்பது நடைபெறவே இல்லை என்றும், இம்முறையே முதல் தடவையாக கொண்டாடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## வவுனியா சிறுவர் பூங்காவில்

வவுனியாவில் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் பெரும் எழுச்சியுடன் நடைபெற்றது.

நேற்று மாலை 2.00 மணியளவில் வவுனியா நகரசபை மைதானத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் பல கோசங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக யாழ். வீதி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தி, புகையிரத நிலைய வீதி, சிறுவர் பூங்கா வீதியூடாக சிறுவர் பூங்காவை வந்தடைந்தனர். அங்கு வவுனியா வளாக மாணவர் தலைவர் தலைமையில் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.இந்நிகழ்வில் சிறப்புரையை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழீழ மாணவர் தினத்தை ஒட்டி வவுனியாவில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வைக் குழப்பும் முயற்சியில் சிறிலங்காப் படையினர் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் அனைத்து பாடசாலைகளுக்கும் சென்று மாணவர் எழுச்சி நாளில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன் வாகன உரிமையாளர்களை மாணவர்களை ஏற்றுவதற்கு செல்ல வேண்டாம் என வலியுறுத்தியதுடன் மாணவர் எழுச்சி நாள் தொடர்பாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை படையினர் கிழித்ததுடன் அதற்கு மேல் எழுச்சி நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டாம் என்று, சுவரொட்டிகளையும் ஒட்டிய படையினர் எழுச்சி நிகழ்வைத் தடுப்பதற்கு பலத்த பிரயத்தனத்தை மேற்கொண்டுள்ளனர்.

## புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியில்

புதுக்குடியிருப்பில் முற்பகல் 10.00 மணிக்கு சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான மாணவர்களின் எழுச்சிப் பேரணியில் செஞ்சோலை மாணவிகளின் அணி வகுப்பு முன் செல்ல தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மிகப்பெரிய அளவிலான வர்ணப்படத்தை மாணவர்கள் தாங்கிச் சென்றனர்.

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியைப் பேரணி சென்றடைந்து அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

அரங்க நிகழ்வுகள் முல்லை மாவட்ட தமிழீழ மாணவர் ஒன்றியத் தலைவர் த. தனுஸ் தலைமையில் இடம்பெற்றன.

## மன்னார் பொதுவிளையாட்டரங்கில்

மன்னாரில் பொது விளையாட்டரங்கில் மாலை 3.00 மணிக்கு மாணவன் லயனல் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு மாணவர்களின் எழுச்சி நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மன்னார் வங்காலைப் பகுதியில் இருந்து எழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வந்து கொண்டிருந்த பாடசாலை மாணவர்களை சிறிலங்காப் படையினரும், பொலிசாரும் தடுத்து நிறுத்தி அவர்களைத்தாக்கியுள்ளனர். அத்துடன் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வில் பங்குகொள்ளச் செல்லவிடாது திருப்பி அனுப்பியுள்ளனர்.

இச்செயல் மாணவர்களின் உரிமையை மறுக்கும் செயல் என மன்னார் மாவட்ட கல்விக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

## உவர்மலை சிறுவர் பூங்காவில்

திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் உவர்மலை சிறுவர் பூங்காவில் இடம்பெற்றன.

காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காருண்யா சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்.

மூதூர் கிளிவெட்டிப் பகுதியில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான மாணவர் எழுச்சிப் பேரணி கிளிவெட்டி மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வுகள் கிழக்கு பல்கலைக்கழகத்திலும், கொக்கட்டிச் சோலையிலும் இடம்பெற்றன.

## மேஜர் முரளியின் நினைவுத் தூபியை புனரமைக்க படையினர் இடையூறு

இதேவேளை, தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுக்காக உரும்பிராய்- கோப்பாய் வீதியில் உள்ள மாவீரர் மேஜர் முரளியின் நினைவுத் தூபியைப் புனரமைக்கும் பணியில் மக்களும், போராளிகளும் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்காப் படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இரவு 8.30 மணிக்கு பவல் கவச வாகனம், ட்ரக் வண்டி என்பனவற்றில் நூற்றுக்கணக்கான படையினர் சென்று இப்பகுதியைச் சுற்றி வளைத்துள்ளனர்.

அருகிலுள்ள வாழைத் தோட்டத்திலும், வீடுகளிலும், தெருவோரங்களிலும் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட படையினர் நிலையெடுத்திருந்தனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் யார் இந்தப் பணியில் ஈடுபடுவது எனப் பெரும் சீற்றத்துடன் கேட்டனர். படையினர் புனரமைப்புப் பணிக்காக ஒளிரவிடப்பட்ட மின்குமிழ்களையும் அகற்றியுள்ளனர்.

நினைவுத்தூபியடியில் நிறுவப்பட்டிருந்த கொடிக்கம்ப மேடையினை அடித்து நொருக்கியுள்ளனர். தூபியினை காலால் உதைத்துள்ளனர். (வோ,10,26,மி,27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.